**சுருக்கம்**

பிற்படுத்தப்படுத்தப்பட்டோர் நலன் - கல்வி - விடுதிகள் - இராமநாதபுரம் மாவட்டம், கமுதியில் பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி துவங்க அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்(பிந1) துறை**

அரசாணை(நிலை) எண் 26
நாள் 5.04.2005

படிக்கப்பட்டது

1. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநரின் கடித எண் பி4/ 6665/2001, நாள் 6.1.2003.
2. இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரின் நே.மு.க.ந.க. எல்2/45349/2003, நாள் 13.12.2003
3. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநரின் கடித எண் பி1/ 6665/2001, நாள் 18.2.2004.

------

ஆணை:

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அம்மாவட்டத்தில் உள்ள கமுதி, முதுகுளத்தூர் வட்டங்கள் மாவட்டத்திலேயே பின்தங்கிய வட்டங்ளாக இருந்து வருகின்றன என்றும், இப்பகுதியில் பயிலும் கல்லூரி மாணவர்களுக்கு விடுதி வசதியினை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் அவர்களின் கல்வித்தரத்தினை மேம்படுத்திட ஓர் வாய்ப்பாக அமையும் என்பதால் கமுதியில் ஒரு புதிய கல்லூரி மாணவர் விடுதி திறப்பதற்கு பரிந்துரைத்துள்ளார்.

2. மேலே முதலாவதாக மற்றும் மூன்றாவதாக படிக்கப் பட்ட கடிதங்களில் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர் கமுதியில் ஒரு புதிய கல்லூரி மாணவர் விடுதி துவங்க பரிந்துரைத்துள்ளார்.

3. இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம் மற்றும் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் ஆகியோரின்

பரிந்துரைகளை ஏற்று இராமநாதபுரம் மாவட்டம், கமுதியில் ஒரு பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி துவங்க அரசு முடிவெடுத்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

(i) இராமநாதபுரம் மாவட்டம், கமுதியில் பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி ஒன்றினை 2005-2006 ஆம் கல்வியாண்டு முதல் புதிதாக துவங்க அனுமதி வழங்கப்படுகிறது.
(ii) கமுதி கல்லூரி விடுதியில் 50 (ஐம்பது மட்டும்) மாணவர்களைச் சேர்க்கலாம்.
(iii) கமுதி விடுதிக்கு கீழ்க்கண்ட பணியிடங்களுக்கு ஒப்புதல் வழங்கப்படுகிறது.
போதகர் மற்றும் காப்பாளர் -1 (ரூ.5500-175-9000)
சமையலர் -1 (ரூ.2550-55-2660-60-3200)
சமையலர் -1 (தொகுப்பூதியம் ரூ.500/-மாதம் ஒன்றுக்கு)

(iv) மேலே இனம் (iii)-ல் ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் மறு பணியமர்வு முறையில் (Redeployment) தான் நிரப்பப்பட வேண்டும் என்றும், நேரடி நியமனம் மேற்கொள்ளக் கூடாது என்றும் அறிவுறுத்தப்படுகிறது.

4. கமுதியில் புதிய விடுதி திறப்பது தொடர்பாக எந்த கூடுதல் செலவினமும் அனுமதிக்கப்படமாட்டாது. செலவினங்கள் அனைத்தும் விடுதிகளுக்கென 2005-06-ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள மொத்த செலவினத் தொகையில் செலவிடப்பட வேண்டும். எதிர்பாராதவிதமாக ஏதேனும் கூடுதல் செலவினம் ஏற்படுமானால் அதற்கான கூடுதல் நிதி ஒதுக்கீடு 2005-2006-க்கான திருத்திய மதிப்பீடு மற்றும் இறுதி திருத்திய மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்படும். 2005-2006-ஆம் ஆண்டு திருத்திய மற்றும் இறுதி திருத்திய மதிப்பீடுகளுக்கு கருத்துரு அனுப்பும்போது இச்செலவினத்தையும் தவறாது சேர்க்குமாறு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர் கோரப்படுகிறார்.

5. இவ்வரசாணை நிதித் துறையின் ஒப்புதலை அதன் அ.சா.எண்.273/DS(VNP)/05, நாள்4.4.2005-ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அ. நாகராஜன்,
சிறப்பு ஆணையர் மற்றும் அரசு செயலர்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.